பிரிட்டனிலிருந்து மீட்கப்பட்ட திருமங்கை ஆழ்வார் சிலையைப் பார்வையிட்டார் முதல்வர் ஜோசப் விஜய்

சென்னை, ஆக. 18: பிரிட்டன் நாட்டிலிருந்து மீட்கப்பட்ட கும்பகோணம் சௌந்தரராஜ பெருமாள் கோயிலின் திருமங்கை ஆழ்வார் சிலையை முதல்வர் ஜோசப் விஜய் பார்வையிட்டார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் பிரசித்தி பெற்ற சௌந்தரராஜப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இக் கோயிலில் இருந்து 1957 முதல் 1967வரையிலானகாலகட்டத்தில், திருமங்கை ஆழ்வாரின் வெண்கலச் சிலையும், மூன்று உலோகச் சிலைகளான காளிங்கநர்த்தனர் திருஷ்ணர், விஷ்ணு, ஸ்ரீதேவி என மொத்தம் 4 சிலைகள் திருடப்பட்டதாக கோயில் செயல் அலுவலரால் கடந்த 2020-ஆம் ஆண்டில் புகார் அளிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, திருமங்கை ஆழ்வாரின் வெண்கலச் சிலை பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் ஆஷ்மோலியன் அருங்காட்சியகத்தில் இருப்பது கண்டறியப் பட்டது. இந்தச் சிலையை அந்த அருங்காட்சியகம் 1967-ஆம் ஆண்டு அடையாளம் தெரியாத விற்பனையாளரிடமிருந்து வாங்கியது தெரிய வந்தது.

இதேபோன்று அடுத்தடுத்து நடைபெற்ற தொடர் விசாரணைகளில், அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள ஆசியக் கலை அருங்காட்சியகத்தில் காளிங்கநர்த்தனர் உலோகச் சிலையும், ஃபுளோரிடாவிலுள்ள ஹில் ஏலக் காட்சியகத்தில் ஸ்ரீதேவி உலோகச் சிலையும், டெக்சாஸில் உள்ள கிம்பெல் கலை அருங்காட்சியகத்தில் விஷ்ணு உலோகச் சிலையும் இருப்பது கண்டறியப் பட்டது.



பிரிட்டனிலிருந்து மீட்கப்பட்ட கும்பகோணம் சௌந்தரராஜ பெருமாள் கோயிலின் திருமங்கை ஆழ்வார் சிலையை சென்னை தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட முதல்வர் ஜோசப் விஜய். உடன், காவல் துறை தலைமை இயக்குநர் மகேஷ்குமார் அகர்வால்.

இதன் தொடர்ச்சியாக, சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு உயர் அதிகாரிகள், திருமங்கை ஆழ்வார் வெண்கலச் சிலையின் பூர்வீகம் மற்றும் உண்மையான தோற்றம் தொடர்பான அனைத்து அறிவியல் ஆதாரங்களையும் சேகரித்து, பிரிட்டன் நாட்டு அரசு அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தனர். இந்த ஆதாரங்களை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் கவுன்சில் ஏற்றுக்கொண்டதன் பேரில், திருமங்கை ஆழ்வார் சிலையை மீண்டும் இந்தியாவுக்கு கொண்டு வந்து ஒப்படைப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.

மீண்டும் நிறுவப்படும்: பின்னர், தூதரக நடவடிக்கைகளின் மூலம் ஆஷ்மோலியன் அருங்காட்சியகத்தின் பாதுகாப்பில் உள்ள திருமங்கை ஆழ்வார் வெண்கலச் சிலை தமிழகத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஆக. 16) கொண்டுவரப்பட்டது. மீட்கப்பட்ட இந்த திருமங்கை ஆழ்வார் வெண்கலச் சிலையை முதல்வர் விஜய்யிடம், காவல் துறை தலைமை இயக்குநர் மகேஷ்குமார் அகர்வால், கூடுதல் காவல் துறை இயக்குநர் (சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு) டி.கல்பனா நாயக் ஆகியோர் செவ்வாய்க்கிழமை காண்பித்தனர்.

அந்தச் சிலையைப் பார்வையிட்ட முதல்வர் விஜய், சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவினருக்கு தனது பாராட்டு, வாழ்த்தைத் தெரிவித்தார்.

அனைத்து சட்டபூர்வ நடைமுறைகளும் நிறைவடைந்த பின்னர், திருமங்கை ஆழ்வார் வெண்கலச் சிலை, அதன் மூலக்கோயிலில் நடைமுறையிலுள்ள சமயச் சம்பிரதாயங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளின்படி பொதுமக்களின் வழிபாட்டுக்காக மீண்டும் நிறுவப்படும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அம்பேத்கர் அயலக உயர் கல்வித் திட்ட உதவித் தொகையை வழங்க வேண்டும்

சென்னை, ஆக. 18: திமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட அம்பேத்கர் உயர் கல்வி திட்டத்துக்கான கல்வி உதவித் தொகை தொடர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திமுக துணை பொதுச் செயலர் கனிமொழி எம்.பி. வலியுறுத்தினார்.



இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் செவ்வாய்க்கிழமை வெளியிட்டப் பதிவு:

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ், மலேசிய தேசியப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உள்ள உயர்கல்வி நிலையங்களில் பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய உதவித்தொகை வழங்கப்படாதது, அவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது தவெக அரசு. திமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதற்காக, இதையும் திட்டமிட்டு மறைமுகமாக செயலிழக்கச் செய்து நிறுத்துவதுதான் இந்த அரசின் நோக்கமா?. உடனடியாக நிலுவையில் உள்ள உதவித் தொகையை விடுவித்து, மாணவர்களின் கல்வியைத் தடையின்றி தொடரச் செய்ய வேண்டும் எனப் பதிவிட்டுள்ளார்.

மத்திய அமைச்சருக்கு கடிதம்: மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, கனிமொழி எழுதியுள்ள கடிதத்தில், பிரிட்டன் விசா, குடியேற்ற விதிமுறை மாற்றங்களால், தமிழ்நாடு அரசின் நிதியுதவி ஏற்கப்படாத நிலையில், அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 2025-26-ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட 300-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு விசா கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைக் களைய வேண்டும். மாணவர்களின் கல்வி வாய்ப்புகள் பறிபோகாமல் இருக்க, பிரிட்டன் அரசுடன் உடனடியாக பேசி இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் கனிமொழி.

நாட்டுத் துப்பாக்கி வெடித்ததில் தொழிலாளி பலத்த காயம்

நத்தம், ஆக. 18: திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அருகே திங்கள்கிழமை இரவு வனப் பகுதிக்கு சட்டவிரோதமாக வேட்டைக்குச் சென்ற இடத்தில் நாட்டுத் துப்பாக்கி வெடித்ததில் கூலித் தொழிலாளி பலத்த காயமடைந்தார். அவருடன் சென்ற மற்றொருவர் கைது செய்யப்பட்டார்.


சந்தானம்

சாணார்பட்டி அருகேயுள்ள சிறுமலை அடிவாரப் பகுதியில் அஞ்சுகுளிப்பட்டியை அடுத்த சொக்கன்குளத்தைச் சேர்ந்த தங்கராஜ் மகன் மாணிக்கம் (29), அஞ்சுகுளிப்பட்டியைச் சேர்ந்த சோலையப்பன் மகன் சந்தானம் (38). கூலித் தொழிலாளர்களான இவர்கள் இருவரும் திங்கள்கிழமை இரவு பழைய வகை நாட்டுத் துப்பாக்கியுடன் வனப் பகுதிக்கு சட்டவிரோதமாக வேட்டைக்குச் சென்றனர்.

இந்த நிலையில், வனப் பகுதியில் திடீரென நாட்டுத் துப்பாக்கி வெடித்ததில்மாணிக்கம்பலத்தகாய மடைந்தார். வெடி சப்தம் கேட்டு வனப் பகுதிக்குச் சென்ற அந்தப் பகுதி பொதுமக்கள், பலத்த காயமடைந்த நிலையில் இருந்த மாணிக்கத்தை மீட்டு, திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

தகவலறிந்த சாணார்பட்டி போலீஸார் வனப் பகுதிக்குச் சென்று நாட்டுத் துப்பாக்கியைப் பறிமுதல் செய்தனர். மேலும், இது தொடர்பாக மாணிக்கத்துடன் வனப் பகுதிக்குச் சென்ற சந்தானத்தைக் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து சாணார்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வன விலங்குகளை வேட்டையாட எடுத்துச் சென்றதாகக் கூறப்படும் நாட்டுத் துப்பாக்கி வெடித்ததில் மாணிக்கம் காயமடைந்தாரா அல்லது வேட்டைக்காக வைத்திருந்த வேறு ஏதேனும் வெடி பெருள் வெடித்ததில் காயமடைந்தாரா என்ற கோணத்திலும் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


பறிமுதல் செய்யப்பட்ட நாட்டுத் துப்பாக்கி.

இதுகுறித்து போலீஸார் கூறியதாவது:

வனப் பகுதிக்கு நாட்டுத் துப்பாக்கியுடன் மாணிக்கம், சந்தானம் இருவரும்சட்டவிரோதமாகவேட்டைக்குச் சென்றனர். அப்போது, அவர்கள் பழைய வகை நாட்டுத் துப்பாக்கியை இயக்கி சோதனை செய்து பார்த்த போது, துப்பாக்கி வெடித்தது. இதில் மாணிக்கம் பலத்த காயமடைந்தார்.

திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் மாணிக்கம் அனுமதிக்கப்பட்டுள்ளதால், அவரிடம் விசாரித்த பிறகே சம்பவம் குறித்த முழுமையான தகவல் கிடைக்கும் என்றனர்.

7 பேரை எரித்துக் கொன்ற வழக்கில் இரு பெண்கள் உள்பட மூவருக்கு ஆயுள் சிறை

மதுரை, ஆக. 18: மதுரை மாவட்டம், சேடபட்டி அருகே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரை வீட்டுக்குள் வைத்து தீயிட்டு எரித்துக் கொன்ற வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இரு பெண்கள் உள்பட மூவருக்கு ஆயுள் சிறைத் தண்டனையும், ரூ. 45 ஆயிரம் அபராதமும் விதித்து, மதுரை 6-ஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டத்துக்குள்பட்ட குமாரபுரத்தைச் சேர்ந்தவர் கண்ணன். இவர் கடந்த 2013-ம் ஆண்டு அதே பகுதியைச் சேர்ந்த பரமேஸ்வரியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். திருமணத்துக்குப் பிறகு கண்ணன் தனது மனைவி பரமேஸ்வரியுடன் சேர்ந்து வாழ மறுத்ததாகக் கூறப்படுகிறது. இதனால், ஏற்பட்ட குடும்ப பிரச்னையை தொடர்ந்து, பரமேஸ்வரி தனது உறவினர்களான முருகேஸ்வரி, ராஜபாண்டி ஆகியோருடன் சேர்ந்து கண்ணனைக் கொலை செய்யத் திட்டமிட்டனர்.

இதையடுத்து, கடந்த 2015-ஆம் ஆண்டு மே 20-ஆம் தேதி அதிகாலை வீட்டில் தனது குடும்பத்தினருடன் தூங்கிக் கொண்டிருந்த கண்ணன், அவரது தந்தை வேலு, தாய் பேச்சியம்மாள், சுகன்யா, சங்கீதா, குழந்தைகள் சஞ்சித், வினித் என 7 பேரும் தீ வைத்து எரித்துக் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து சேடபட்டி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் கண்ணனின் மனைவி பரமேஸ்வரி, முருகேஸ்வரி, ராஜபாண்டி ஆகியோர் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டனர்.

இந்த வழக்கு மதுரை 6-ஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில், மதுரை 6-ஆவது கூடுதல் மாவட்ட நீதிபதி (பொறுப்பு) உதயவேலவன் செவ்வாய்க்கிழமை அளித்த தீர்ப்பு:

பரமேஸ்வரி, முருகேஸ்வரி, ராஜபாண்டி ஆகியோர் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டது. எனவே, இவர்கள் மூவருக்கும் தலா 8 ஆயுள் சிறைத் தண்டனையும், தலா ரூ. 45 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படுகிறது. இந்தத் தண்டனைகளை இவர்கள் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றார் நீதிபதி.

மாநகரப் போக்குவரத்து கழகத்துக்கு தனியார் மூலம் நடத்துநர்கள் நியமனம்: அரசியல் கட்சிகள் கண்டனம்

சென்னை, ஆக. 18: மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் தனியார் நிறுவனம் மூலம் நடத்துநர்களை நியமிக்கும் முடிவுக்கு இடது சாரிக் கட்சிகள், தமிழக வாழ்வுரிமைக் கட்சி ஆகியன செவ்வாய்க்கிழமை கண்டனம் தெரிவித்தன.

பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட்): திமுக ஆட்சிக்காலத்தில் போக்குவரத்துக் கழகத்தில் காலிப் பணியிடங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களை 'சால்வாட்' என்ற நிறுவனம் மூலம் நியமனம் செய்தது. தற்போதைய தவெக அரசு எஸ்.எஸ்.எண்டர்பிரைசஸ் என்ற உத்தர பிரதேச நிறுவனத்தின் ஒப்பந்தம் மூலம் நடத்துநர்களை நியமிக்க முடிவு செய்துள்ளது. இந்த ஆணையை ரத்து செய்ய வேண்டும்.



மு.வீரபாண்டியன் (இந்திய கம்யூனிஸ்ட்): சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்துக்கு 1,800 நடத்துநர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு, உத்தர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு ஒப்பந்தம் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஏராளமானோர் வேலையில்லா திண்டாட்டத்தில் வாடும் நிலையில், வேறு மாநிலத்தவர்களுக்கு வேலை வழங்குவது தமிழக மக்களுக்கு எதிரானதாகும்.



தி.வேல்முருகன் (தவாக): தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் நடத்துநர் பணியிடங்களை ஒப்பந்த முறையில் நிரப்ப உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த நிறுவனத்துடன் தமிழக அரசு ஒப்பந்தம் செய்துள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது கண்டிக்கதக்கது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

மின்னணு — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி தகுதி மனம்பற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து, கீழ்க்காணும் பணிகளுக்காக சென்னைக் குடிநீர்வாரியத்தில் மேற்கொள்ளும் முறைக்கு ஒரு உறையில் தமிழ்நாடு முனிசிபாலிடைஸ் டெண்டர்ஸ் ஆக்ட் 1998 மற்றும் விதிகள் 2000க்குட்பட்டு இ-ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

வ எண்	ஒப்பந்தப்புள்ளியின் பெயர் மற்றும் எண்	ஒப்பந்த முன் வைப்புத் தொகை	தகுதி	மின்னணு ஒப்பந்தம் சமர்ப்பிப்பு இறுதி தேதி	மின்னணு ஒப்பந்தம் திறக்கப்படும் தேதி
1.	பூண்டி (நீரேற்று நிலையத்தில் தற்போதுள்ள 750KVA மற்றும் ஜெனரேட்டர் செட்டிற்குப் பதிலாக புதிய 1010 KVA மற்றும் ஜெனரேட்டர் செட்டிற்குத் தேவையான மண்டல அலுவலகம் II-இல் உள்ள மனை உரு நிலையத்தில் தற்போதுள்ள 500 KVA ஜெனரேட்டர் செட் நீக்கம் பணி, ஒப்பந்தப்புள்ளி எண்.376/ 2026-27	ரூ. 87,900.00	வகுப்பு I,II & III-ஐச் சார்ந்த மற்றும் அனைத்து மேல்	08.09.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை	09.09.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு பிறகு
2.	பகுதி VI, பணியகம் 73-இல் பெரியார் நகர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு கண்ணப்பர் திடல் குடிநீர் விநியோக நிலையத்திலிருந்து (WDS) 200 மிமீ விட்டமுள்ள நெகிழ்குழாய் மூலம் குடிநீர் வழங்கிடும் பணிக்கு பதிலாக புதிய பணி, ஒப்பந்தப்புள்ளி எண்.376/ 2026-27	ரூ. 60,000/-	வகுப்பு I,II & III-ஐச் சார்ந்த மற்றும் அனைத்து மேல்	08.09.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை	09.09.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு பிறகு
3	ஒப்பந்த முன்வைப்பு தொகையை இணையவழி பரிமாற்றுனையாக இணையதளத்தில் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்கள் இணையவழியில் ஒப்பந்த முன்வைப்பு தொகையை செலுத்தியதற்கான ஸ்லிப் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்க வேண்டும்.				
4	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இ-ஒப்பந்தப்புள்ளிகளை www.tntenders.gov.in இணையதளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கவும். மேற் குறிப்பிடப்பட்ட விவரங்களைத் தவிர மேலும் விவரங்களைப் 20.08.2026 முதல் இணையதளத்தில் வெளியிடப் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் பார்வையிடவும்.				

செ.ம.தொ.இ./2608/ஒப்பந்தப்புள்ளி/2026 மேற்பார்வைபொறியாளர் (மூகம)(பொ)

கடையநல்லூர் நகராட்சி
தென்காசி மாவட்டம்

ந.க.எண். 907/2023/இ1 நாள்:17.08.2026

இரண்டு உறை குழுவிலான மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கடையநல்லூர் நகராட்சியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுதிட்டத்தின் கீழ் இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 01 முதல் 08 வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு தயார் செய்து விநியோகம் செய்யும் பணியினை மேற்கொள்ள கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் அவர்களால் இரண்டு உறைகள் இணையுள்ள வாயிலாக மட்டுமே குழுவிலான மறுஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. பணியின் மதிப்பு : ரூ.237.00 லட்சம்.
2. முன்வைப்புத் தொகை : பணியின் மதிப்பீட்டில் 1 %.
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து 20.08.2026 அன்று காலை முதல் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
4. **பொதுவான நேரம் மற்றும் நாள்**

அ)	ஒப்பந்தப்புள்ளிக்கு முன்வைத்தாய்வுக்கூட்டம்	-
ஆ)	ஒப்பந்த நமூனா இறக்கம் செய்வதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்	28.08.2026ம் தேதி
இ)	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்	வெள்ளிக்கிழமை மாலை 03.00 மணி வரை
ஈ)	தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறந்தல்	28.08.2026ம் தேதி மாலை 03.30

5. ஒப்பந்தப்புள்ளி நெறிப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி நெறிப்பட்டு திறக்கப்படும்.
6. எதேனும் திருத்தமான / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

செ.ம.தொ.இ./2600/ஒப்பந்தப்புள்ளி/2026

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

திருப்பூர் மாநகராட்சி

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.E1/4538/2026 நாள் : 17.08.2026

1. வேலு மாநில நிதி குழுவின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் உள்ள **60 வார்டுகளிலும்** ட்ரோன் மற்றும் DGPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, LIDAR மற்றும் பல்வேறு சாய்வு கோணங்களில் (4 Oblique + 1 Nadir) படமெடுக்கும் கேமரா மூலம் 2D/3D வரைபடங்களை உருவாக்குதல் / தயாரித்தல் பணி மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. மேற்படி திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை **ரூ.152.00 லட்சம்** ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை **https://tntenders.gov.in** இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **https://tntenders.gov.in** இணையதள முகவரியில் **18.08.2026** முதல் **08.09.2026** வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் **24.08.2026** அன்று **காலை 11.00** மணியளவில் திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.
6. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் **08.09.2026** அன்று **மாலை 3.00 மணி** வரையில்.
7. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **09.09.2026** அன்று மாலை **3.30 மணி.**
8. ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டுத் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறிவுடன்.

ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி

செ.ம.தொ.இ./2605/ஒப்பந்தப்புள்ளி/2026

MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623, Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.o. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 16.09.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

திண்டுக்கல், அய்யலூர் திண்டுக்கல், 0128740700031824, 1839, 2816, 2826, 2831, 2835, 2836, 2843, 2861, 2878, 2888, 2893, 0128740730045033, 5042, 5043, 5052, 5054, 5058, 5059, 5060, 5061, 5062, 5066, 5067, 5068, 5069, 5070, 5071, 5072, 5073, 5074, 5077, 5079, 5080, 5081, 5084, 5091, 5094, 5098, 0264, 0267, 0268, 0269, 0270, 0272, வத்தலகுண்டு, 0101280700095795, 7009, 7010, 7014, 7016, 7017, 7033, 7036, 7042, 7043, 7045, 7061, 7073, 7075, 7076, 7087, 7098, 7099, 7104, 7106, 7108, 7112, 7116, 7432, 0101280730041274, 1277, 1278, 1289, 1295, 1299, 1300, 1306, 1310, 1311, 1312, 1313, 1314, 1319, 1326, 1330, 1331, 1334, 1337, 1343, 1347, 1350, 1351, 1354, 1364, 1377, 1379, 1380, 1382, 1383, 1391, 1392, 1393, 1400, 1401, 1405, 1406, திண்டுக்கல், 0124000700045160, 5176, 5186, 5193, 5201, 5214, 5256, 0124000730034389, 4405, 4412, 4413, 4426, 4427, 4447, 4448, 4449, 4463, 4464, 4465, 4474, 4475, 4481, 4484, 4507, 4517, 4518, 4520, 4522, 4539, எரியோடு திண்டுக்கல், 0127390700032525, 2529, 2533, 2536, 2550, 2561, 2568, 2570, 2580, 2584, 0127390730016903, 8337, 8342, 8350, 8359, 8382, 8389, 8390, 8391, 0142, குஜிலியம்பாறா திண்டுக்கல், 0119240700029723, 9748, 0653, 0660, 0664, 0671, 0680, 0695, 0701, 0708, 0711, 0722, 0725, 0736, 0119240730025674, 5695, 5713, 5727, 0272, 0275, 0277, 0278, 0280, கொடைக்கானல், 0129200700042033, 2109, 2145, 2153, 2159, 2195, 2206, 2211, 3425, 3429, 3434, 3447, 3452, 3454, 3463, 3466, 3476, 3499, 3504, 3516, 3521, 3522, 3523, 3525, 3526, 3531, 3535, 3540, 0129200730027517, 7521, 7529, 7533, 7534, 7536, 7547, 7550, 7552, 7567, 7570, 7571, 7573, 7587, 7589, 7591, 7600, 7602, 7606, 7607, 7608, 7609, 7611, 7612, 7618, 7629, 7632, 7637, 7643, 7647, 7658, நத்தம், 0102770700761055, 1072, 1073, 1101, 1104, 1110, 0102770730019053, 9998, 9999, 0021, 0027, 0251, 0255, 0256, ஒட்டன்சத்திரம், 0101510700766142, 6195, 6229, 6231, 6233, 0101510730032125, 2126, 2137, 2138, 2142, 2150, 2158, 2160, 2171, 2192, 2193, 2200, 2201, 2202, 2204, 2217, 2218, 2221, 2223, 2235, 2238, 2239, 2241, 2244, 0181, 0190, பழனி ஆர் எஃப் ரோடு, 0105360700793007, 3008, 3033, 3065, 3066, 3083, 3085, 3087, 3088, 3138, 0105360730066478, 6479, 6480, 6483, 6486, 6493, 6503, 6504, 6505, 6511, 6512, 6514, 6519, 6534, 6552, 6555, 6557, 6559, 6560, 6571, 6574, 6576, 6579, 6580, 6585, 6588, 6591, 6614, 6618, 6622, 6639, 6641, 6642, 6648, 6649, 6650, 6652, 6665, 6669, 6674, 6675, 6679, 6680, 0225, 0234, பழனி ரோடு திண்டுக்கல், 0102740700046686, 6717, 6729, 6732, 6739, 6742, 6745, 6748, 6764, 6765, 0102740730016120, 1489, 1495, 1498, 1509, 1512, 1532, 1535, 1546, 1548, 1557, 1558, 1574, பாளையம் திண்டுக்கல், 0130870700031176, 2109, 2116, 2147, 2199, 3232, 3243, 3250, 3254, 3262, 3278, 3282, 3283, 3286, 3298, 3302, 3309, 3311, 3315, 3319, 0130870730022579, 8504, 8515, 8521, 8524, 8525, 8530, 8531, 8534, 8540, 8544, 8554, 8557, 8561, 8563, 8564, 8570, 8574, 8575, 8577, 8579, 8580, 8608, 8612, 8613, 8614, 8620, 8621, 0251, 0256, 0258, வடமதுரை திண்டுக்கல், 0126100700036920, 6925, 6929, 6933, 6935, 6939, 6940, 6947, 6954, 6957, 6959, 6965, 6983, 6989, 6993, 6997, 7000, 0126100730037699, 7751, 7763, 0425, 0442, 0443, 0444, 0445, 0446, 0447, 0448, 0451, 0460, 0462, 0463, 0464, 0467, 0468, 0474, 0476, 0477, 0478, 0481, 0489, 0492, 0493, 0494, 0495, 0498, 0499, 0510, 0603, 0251, 0256, 0262, வேடசந்தூர், 0127070700033987, 4937, 4940, 4952, 4975, 4976, 4986, 4987, 4988, 4999, 5012, 5015, 0127070730022275, 5330, 5341, 5349, 5351, 5352, 5353, 5359, 5367, 5375, 5396, 5399, 5412, 5418, 5424, 5425, 0239, 0241, ஓய் எம் ஆர் பட்டி திண்டுக்கல், 0101900700761503, 1508, 1515, 1522, 1525, 1546, 1562, 1570, 1573, 1588, 1589, 0101900730042279, 2292, 2294, 2309, 2331, 2350, 2353, 0242, 0246, மதுரை, அழகர் கோயில் ரோடு தல்லாகுளம், 0101270700076002, 6031, 6058, 6060, 6070, 0101270730020441, 2893, 2897, 2907, 2908, 2912, 2922, 2939, 2941, 2948, 2967, 2970, 0096, அரப்பாளையம் பஸ் ஸ்டாண்டு, 0128270700027305, 7316, 7332, 7344, 0128270730013739, 3746, 3756, 3762, 3763, 3771, 3776, 3785, 3786, 0176, 0183, அரப்பாளையம் மதுரை, 0101140700795302, 6266, 6287, 6292, 6308, 6319, 6332, 6345, 6350, 6360, 6361, 6364, 0101140730019412, 9434, 9439, 9440, 9441, 9442, 9443, 9444, 9447, 9448, 9453, 9479, 9483, 9508, 9514, 9516, 9517, 9518, 9520, 9524, 9525, 9530, 9531, 9532, 9537, 9551, ஞானஒளிபுரம், 0113900700035410, 6144, 6162, 6175, 6177, 0113900730011004, 3204, 3205, 3206, 3207, 3211, 3212, 3218, 3221, 3222, 3223, 3225, 3226, 3227, 3236, 3237, 3240, 3241, 3242, 3243, 3244, 3245, 3246, 3247, 3249, 3250, 3257, 3265, 3266, 3272, கருப்பாயூரணி மதுரை, 0112730700079476, 1774, 1778, 1794, 1800, 1825, 1831, 1846, 1871, 1872, 1882, 1884, 1885, 1887, 1890, 1905, 1910, 1912, 1914, 1930, 1931, 1937, 1940